**செய்தி வெளியீடு எண்: 647** **நாள்: 29.10.12**

# உலகச் சிக்கன நாள்

## வாழ்த்துச் செய்தி

உலகச் சிக்கன நாள் இன்று தமிழகமெங்கும் கொண்டாடப்படுவது கண்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன். சிறுசேமிப்பு என்பது வறுமை, பிணி போன்ற சமூக கேடுகளை ஒழிக்க வழி செய்யும் அருமருந்தாகும். பாடுபட்டு சம்பாதிக்கும் பணத்தைப் பாதுகாப்பது மனிதனின் கடமையாகும்.

“அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும் "

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க, வருமானத்திற்கு ஏற்ப செலவு செய்து சிக்கனமாக வாழ்வது என்பது வீட்டிற்கும், நாட்டிற்கும் பயன் சேர்ப்பதாகும் என்பதையே இந்நாள் உணர்த்துகிறது.

மக்கள் தங்களது சேமிப்பை பாதுகாப்பான இடத்தில் முதலீடு செய்தால்தான், அவர்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் முதலீடு செய்த பணத்தை உடனடியாக திரும்பப் பெறமுடியும். தங்களின் எதிர்காலத் தேவைகளான பிள்ளைகள் படிப்பு, திருமணம் மற்றும் வீடு கட்டுதல் போன்ற செலவினங்களை கடன் வாங்காமல், தங்கள் சேமிப்பிலிருந்தே மேற்கொள்ளவும் முடியும். எனவே பாதுகாப்பான அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து பயனடைய வேண்டுகிறேன்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் நல்லாட்சியில், தமிழக மக்கள் அனைவரும் தங்களது இருப்பிடங்களுக்கு அருகில் உள்ள அஞ்சலகத்தில் வீட்டிற்கு ஓர் அஞ்சலக தொடர் சேமிப்புக் கணக்கினை (Recurring Deposit Account) உடனடியாகத் துவக்கி பயன் பெற்றிட வேண்டுமென்று **'உலகச் சிக்கன நாளில்'** அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**ஓ. பன்னீர்செல்வம்**
**நிதி அமைச்சர்**

**வெளியீடு:-**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**